**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 294/மா/2023**
**நாள்: 30.11.2023**

திரு. மு. ரவிசங்கர்,
சென்னை– 28. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–13, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, மந்தைவெளிபாக்கம், பாரதிநகர், எண்.23 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. ரவிசங்கர் என்பவரின் 09.09.2023 நாளிட்ட மனு 12.09.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 294/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, மந்தைவெளிபாக்கம், பாரதிநகர், எண்.23 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. ரவிசங்கர் என்பவரின் 09.09.2023 நாளிட்ட மனுவில்:

"மேற்கண்ட விலாசத்தில் வசிக்கும் நான் சமூக ஆர்வலராக செயல்பட்டு வருகிறேன். மேலும் பல அறிய பயனுள்ள தகவலை பெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் மாவட்ட மாற்றுத்திறனாளி பயன்பாட்டிற்கும் பயனடையும் வகையில் தகவலை பகிர்ந்து வருகிறேன் என்பதை மிகவும் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

1. பட்டியல் வரிசை எண்.7-Z13-D173 {Jain Sagarika Residential Houses, Sathyadev Avenue, (Extent in sq.m) 610.00

2. பட்டியல் வரிசை எண்.13-Z13-D173 M.R.C. (Leela Palace Hotel) M.R.C. Nagar Leela Palace Hotel, R.S.No.4288/108,110 Extent in sq.m.1944.00.

3. மேற்கண்ட திறந்தவெளி பூங்காக்களில் தற்போது அங்கு குடியிருக்கும் ஒரு சில நபர்களின் சுய நோக்கத்துடன் தன்னிச்சையாக செயல்படுகிறது. மேலும் எந்த நேரமும் மூடி வைக்கப்பட்டுள்ளது. பொதுவாக திறந்தவெளி பூங்காக்கள் பகுதி மக்கள், பொதுமக்கள் குழந்தைகள், முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள் நடைபயிற்சி செல்வதற்கும், சுகாதார காற்று

சுவாசிக்கும் வகையில் பயன்படுத்தவே அரசு உயர் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது என்பது உண்மை.

ஆனால் மேற்கண்ட திறந்தவெளி பூங்காக்களில் தற்போது மாற்றுத்திறனாளி சம உரிமை சட்டம் 2009இன் கீழ் சாய்வு தளம் மேடை RAMP/HAND RAIL கூடுதல் கைப்பிடி கம்பி எளிதாக நகரும் நாற்காலியில் செல்வதற்கும் உரிய வழிவகை செய்யப்படவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாணை எண்.21 நாள்:1.2.2023ன்படி எந்தவித வசதிகளும் மாற்றுத் திறனாளிகளுக்கு தகுந்தவாறு வைக்கப்படவில்லை என்பதை மிகவும் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும் இதனை உடனுக்குடன் ஆய்வு செய்து இந்த திறந்தவெளி பூங்காக்களை உரிய பராமரிப்புகள் செய்யப்படும் பொறுப்புள்ள உதவிப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோர் அரசு நலத்திட்ட ஒதுக்கீட்டின் கீழ் தேவையான அனைத்து வசதிகளும் மேன்மை ஏற்படுத்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர எளிதில் தெரிந்திட Corporation Notice Board அறிவிப்பு பலகையை உடனடியாக வைக்க வேண்டுகிறேன். இந்த அறிவிப்பு பலகையில் திறந்தவெளிப் பூங்காக்களின் உபயோகிக்கும் நேரம், விவரம், இதனை பராமரிக்க கூடிய உதவிப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பாளர் அவர்களுடைய (CUG Cell Numbers) செல் நம்பர், பூங்கா தொடர்பான புகார் அளிக்க ஏதுவாக மின்னஞ்சல் பெட்டி விவரங்களையும் அமைத்திட வேண்டி, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உத்திரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 27.09.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 13 மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. மண்டல அலுவலர் தனது 19.10.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13, பகுதி – 40, வார்டு – 171, ராஜா அண்ணாமலைபுரம், MRC Nagar–ல் உள்ள ஜெயின் சகாரிகா குடியிருப்பு மற்றும் லீலாபேலஸ் ஹோட்டல் ஆகிய பகுதிகளில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி பூங்காக்கள் பொது மக்களின் முழு பயன்பாட்டிற்கு ஏற்ற வகையிலும் முதியோர்கள், மாற்று திறனாளிகள் ஆகியோர் நடைபயிற்சி மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் சாய்தளம் SS கைப்பிடி, திறந்தவெளி பூங்காவின் பொறுப்புள்ள அதிகாரிகளின் தொலைபேசி எண்கள், பார்வை நேரம் கூடிய பெயர் பலகை மற்றும் புகார் பெட்டி ஆகியவை பொருத்தப்பட்டு இத்துடன் அதற்கான புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13, பகுதி-40 வார்டு-171, ராஜா அண்ணாமலைபுரம், சத்தியதேவ் அவென்யூ, ஜெயின் சகாரிகா திறந்தவெளி நிலப் பூங்கா சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் வாயிலாக திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூ.10.35 லட்சத்தில் பூங்கா மேம்படுத்தும் பணிமேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விரு திறந்தவெளி பூங்காவினை முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பொது மக்களின் முழு பயன்பாட்டிற்கு செயல்படுவது கண்காணிக்கப்படும்.

மேலும் இதன் மீதான விபரங்கள் மனுதாரருக்கு 25.10.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.11.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 16.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 21.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13, ராஜா அண்ணாமலைபுரம் எம்.ஆர்.சி நகரில் உள்ள ஜெயின் சகாரிகா குடிருப்பு மற்றும் லீலா பேலஸ் ஓட்டல் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி பூங்காக்களை அங்குள்ள அடுக்குமாடி குடியிருப்பில் உள்ளோர் மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர். பூங்காவை அடுக்குமாடி குடியிருப்புவாசிகளே பூட்டி அதன் சாவியை தங்கள் வசம் வைத்துக்கொள்கின்றனர். எனவே பூட்டிய பூங்காவை அங்குள்ள பொதுமக்கள் யாரும் பயன்படுத்துவதில்லை. மேலும் அங்குள்ள பூங்காக்களில் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக சாய்வு தளம் (Ramp) அமைக்கப்பட்டிருந்தது. சாய்வு தளம் அமைக்கப்பட்ட சில நாட்களிலேயே பழுதடைந்துவிட்டது. அப்பூங்காவில் அமைந்துள்ள கைப்பிடி கம்பியும் பழுதடைந்துள்ளது. இது தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

எனவே மேற்கண்ட பூங்காக்களை அங்குள்ள குடியிருப்புவாசிகளே பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதைத் தடுத்து, மாநகராட்சியைச் சேர்ந்தவர்களே பூங்கா பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் மேற்கண்ட பூங்காக்களை அங்குள்ள பொதுமக்கள் பயன்படுத்திடவும் அங்குள்ள பூங்காக்களில் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தக்கூடிய சாய்வு தளத்தையும் மற்றும் கைப்பிடியையும் உடனுக்குடன் செப்பனிடவும் மேலும் அங்குள்ள பூங்காக்களில் "இப்பூங்கா பொதுமக்கள் பயன்பாட்டிற்கானது" என்பது குறித்தும் பூங்காவை பொதுமக்கள் பயன்படுத்தும் நேரம், மாநகராட்சி பராமரிப்பாளர் பெயர் மற்றும் தொலைபேசி எண்கள், பூங்கா தொடர்பான புகார்களை அனுப்ப வேண்டிய முகவரி போன்ற விவரங்கள் அடங்கிய அறிவிப்புப் பலகை வைத்திடவும் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13–ன் செயற்பொறியாளர் 21.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13, ராஜா அண்ணாமலைபுரம் எம்.ஆர்.சி நகரில் உள்ள ஜெயின் சகாரிகா குடிருப்பு மற்றும் லீலா பேலஸ் ஓட்டல் ஆகிய பகுதிகளில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான திறந்த வெளி நிலங்களில் உள்ள பூங்கா பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையிலும், மாற்றுத் திறனாளிகள் ஆகியோரும் நடைபயிற்சி மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் சாய்தளம், கைப்பிடி ஆகியவை போடப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. ஆனால் மேற்கண்ட பூங்காக்களில் காவலர் (Watchman) போடப்பட்டு குறிப்பிட்ட நேரத்தில் திறந்து, பயன்பாட்டு நேரம் முடிந்ததும் பூட்டிவிடுகின்றனர். மேலும் இப்பூங்காவின் பராமரிப்பு

அங்குள்ள Residents' Welfare Association மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது அங்குள்ள பூங்காக்களில் மாநகராட்சி பூங்கா எனவும் அப்பலகையில் பூங்காவிற்கான பொறுப்பு அலுவலர் பெயர், தொலைபேசி எண், பயன்படுத்தும் நேரம் ஆகியவை அடங்கிய பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட பூங்காக்களை அங்குள்ள அடுக்குமாடி குடியிருப்புவாசிகள், அவர்களே பூங்காவிற்கான சாவியை வைத்துக்கொண்டு, வெளியாட்களை அனுமதிக்காமல் அவர்கள் மட்டுமே பயன்படுத்துவதாகத் வந்துள்ள புகாரையடுத்து மேற்கண்ட பூங்காக்களின் பராமரிப்பை மாநகராட்சியே இனி மேற்கொள்ளும் என்பதையும், மேற்கண்ட பூங்காக்களை பொதுமக்கள் பயன்படுத்துவதை அடிக்கடி உறுதி செய்யப்படும் என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பெருநகர சென்னை மண்டலம் 13ல் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில் "மாநகராட்சி பூங்கா" என பெயர்பலகை வைக்கப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-13ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13, ராஜா அண்ணாமலைபுரம் எம்.ஆர்.சி. நகரில் உள்ள ஜெயின் சகாரிகா குடியிருப்பு மற்றும் லீலா பேலஸ் ஓட்டல் ஆகிய பகுதிகளில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்த வெளிநிலங்களில் உள்ள பூங்காக்களை அங்குள்ள குடியிருப்புவாசிகளே பூட்டி சாவியை தங்கள் வசம் வைத்துக்கொள்வதால், பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலை உள்ளதாகவும், அப்பூங்காக்களில் "கீழ் சாய்வு தளம் மற்றும் கூடுதலாக கைப்பிடிகள்" அமைக்கப்படவில்லை என்று தெரிவித்து இவற்றை அமைத்திடவும், இப்பூங்கா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உரியது என்றும், பார்வை நேரம் தொலைப்பேசி எண்கள் கொண்ட பெயர் பலகையும் மற்றும் புகார் பெட்டி வைக்கவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட ஜெயின் சகாரிகா திறந்தவெளி பூங்கா சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் வாயிலாக திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூ.10.35 இலட்சத்தில் மேம்படுத்த பணி மேற்கொள்ளப்படுகிறது என்றும் மேற்கண்ட பூங்கா மற்றும் லீலா பேலஸ் ஹோட்டல் பூங்கா ஆகியவை பொது மக்களின் முழு பயன்பாட்டிற்கு ஏற்ற வகையிலும் முதியோர்கள் மாற்று திறனாளிகள் ஆகியோர் நடைபயிற்சி மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் சாய்தளம் SS கைப்பிடி திறந்தவெளி பூங்காவின் பொறுப்புள்ள அதிகாரிகளின் தொலைபேசி எண்கள், பார்வை நேரம் கூடிய பெயர் பலகை மற்றும் புகார் பெட்டி ஆகியவை பொருத்தப்பட்டுள்ளது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13 மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், மேற்கண்ட பூங்காக்களில் காவலர் (watchman) போடப்பட்டு குறிப்பிட்ட நேரத்தில் திறந்து, பயன்பாட்டு நேரம் முடிந்ததும் பூட்டி விடுவதாகவும், இப்பூங்காக்கள் அங்குள்ள Residents' Welfare Association மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது என்றும், மனுதாரரின் புகாரினையொட்டி, இப்பூங்காக்களின் பராமரிப்பை மாநகராட்சியே இனி மேற்கொள்ளும் என்றும், இப்பூங்காக்கள் பொதுமக்கள் பயன்படுத்துவதை உறுதி செய்யப்படும்

என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ல் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில் "மாநகராட்சி பூங்கா" என பெயர்பலகை வைக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் திறந்தவெளி பூங்காக்கள் பொதுமக்கள் குறிப்பாக வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எவ்வித இடர்பாடுமின்றி பயன்படுத்துவதை மண்டல அலுவலர்கள் உறுதிசெய்ய வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு அடுக்குமாடி குடியிருப்புக்கு பக்கத்தில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி பூங்காவின் பராமரிப்பை அடுக்குமாடி குடியிருப்பு நல சங்கத்திடம் ஒப்படைத்திருப்பதை இம்முறைமன்றம் ஏற்கவில்லை. இச்செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும். அடுக்குமாடி குடியிருப்பு நலச்சங்கத்திடம் பராமரிப்பை வழங்கினால் பொதுமக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படாது என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளிப் பூங்காக்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் பராமரிப்பிலேயே இருந்திட வேண்டும். அதனால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ல் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி பூங்காக்கள் அடுக்குமாடி குடியிருப்பு நலசங்கத்தின் பராமரிப்பின் கீழ் இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு அதனை திரும்ப பெற்று மாநகராட்சி மண்டலம்-13ன் கட்டுப்பாட்டில் எடுத்து பராமரிப்பை மாநகராட்சியே மேற்கொள்ள வேண்டும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி பூங்காக்களில் வயதானவர்கள் மற்றும் மாற்று திறனாளிகள் வசதியாக நடைபயிற்சி மேற்கொள்ளவேண்டி உரிய சாய்வு தளம், கூடுதல் கைப்பிடிகள் மற்றும் தேவையான வசதிகளை ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மண்டலத்தில் உள்ள கள பணியாளர்கள் அடிக்கடி அப்பூங்காக்களை ஆய்வு செய்து அதற்கான அறிக்கையை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

OSR Land and the Park developed on this piece of land by the Greater Chennai Corporation are properties vested with the Corporation. Surrender of the Park to the Residents' Welfare Association of these apartments exposes the favouritism, breach of law and maladministration of the Zonal level Greater Chennai Corporation with the ulterior intention of appeasing the apartment dwellers.

It is a serious breach of the Corporation ethics and code. A Public Park with the Notice Board of the Greater Chennai Corporation as could be seen in the photos is a space for the general public, elderly, men, women, children apart from the differently abled fraternity. It is a sign of audacity that the Greater Chennai Corporation Zone 13 has entrusted the maintenance of this park to the Residents' Welfare Association of the apartments. This is condemned by the Forum in strong terms. The Greater Chennai Corporation Commissioner is directed to throw the park open to the Public forthwith besides installing necessary utilities like children play area facilities, elderly and differently abled friendly handrails, benches etc., Timings for use of the Park by the general public should be

266



exhibited on the Board conspiciously. The monopoly control of the park to the Residents' Welfare Association of the apartments should be ended immediately by organizing watch and ward arrangements suitably as in the other Greater Chennai Corporation Parks. This abuse and blatant favouritism are being reported to the Government in Municipal Administration and Water Supply Department and Hon'ble Chief Minister's Office for information. The Commissioner for Disabled should also initiate necessary remedial action by appropriate steps.

2023-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. மு. ரவிசங்கர்,
23, பாரதி நகர், மந்தவெளிபாக்கம்,
சென்னை – 600 028.
2. கூடுதல் தலைமைச் செயலர் (ம) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. முதலமைச்சர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
4. முதன்மைச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
5. ஆணையர்,
மாற்றுத் திறனாளிகளுக்கான நல ஆணையம்,
காமராஜர் சாலை, சென்னை – 600 005.
6. மண்டல அலுவலர்,
மண்டலம் - 13, பெருநகர சென்னை மாநகராட்சி,
115, டாக்டர் முத்துலட்சுமி சாலை,
அடையார், சென்னை – 600 020.
7. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை 600 032